# நெழுவ பிரதேச சபை

# காலி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 07 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நெழுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------------

2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளுராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 வருடங்களுக்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 104,338 இற்கான இனங்காணப்படாத வருமான மீதியொன்று பொறுப்புக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான 06 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,203,287 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் ரூபா 1,203,287 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் போது கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத இரண்டு நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் போது கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 572,547 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர்கள் ரூபா 572,547 இனால் குறைவாகவும், திரண்ட நிதியக் கணக்குகளின் மீதி அதே தொகையால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்கான 12 நிர்மாண வேலைகளுக்காக ரூபா 7,475,775 இற்கான கிடைக்க வேண்டிய மூலதன உதவி மற்றும் செலுத்த வேண்டிய செலவுகளுக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் ரூபா 7,475,775 இனால் மற்றும் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டிற்கான நிர்மாண வேலை ஒன்றான யக்கடுவை பாதை 04 மீற்றர் அகலத்திற்காக வெட்டி சமப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 96,869 தொகையொன்று கடன்கொடுத்தோரின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், ரூபா 78,693 மீண்டும் ஒரு முறை செலவுத் தலைப்பிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகள் ரூபா 78,693 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 46,950 இற்கான பொறிகள் பொறித்தொகுதிகள், ரூபா 1,532,200 இற்கான தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் ரூபா 17,500 இற்கான கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கான செலவுகள் ஆக மொத்தம் ரூபா 1,596,650 இற்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தி இருக்காமையால் நிதிக் கூற்றுக்களில் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தில் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 1,596,650 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தன.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் முற்கொடுப்பனவு மீதி ரூபா 423,125 ஆக காணப்பட்டதுடன் துணைப்பதிவேடுகளின் பிரகாரம் அம் மீதி ரூபா 1,435,625 என காணப்பட்டதால் ரூபா 1,012,500 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 1,443,735 இற்கான கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகள், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் சமப்படுத்தப்பட்டிருக்காமையால் கட்டுப்பாட்டு கணக்குகளின் மீதிகள் துணைப் பதிவேட்டு மீதிகளுடன் இணக்கஞ் செய்ய முடியாதுள்ளது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 57,430,080 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள், நாளது வரை பேணப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டு சபை அறிக்கைகள், சமப்படுத்தப்பட்ட வைப்பு பதிவேடுகள், பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு போன்ற சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

--------------------------

2.1 நிதி விளைவுகள்

-----------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 613,519 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,435,943 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------------

2.2.1 ஏக்கர் வரி மற்றும் வாடகை

---------------------------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 6,222 ஏக்கர் வரி மற்றும் ரூபா 9,480,197 இற்கான வாடகைகள் நிலுவையாக காணப்பட்ட போதும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158 மற்றும் 159 பிரிவுகளின் பிரகாரம் நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 108,917 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,217,860 இற்கான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.2.3 ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்யாமை

-----------------------------------------------------------------------------------------------

2009 ஆண்டின் போது நெழுவ சந்தையில் காணப்பட்ட 258 வர்த்தக சிறு கடைகள் வியாபாரிகளுக்கு வழங்கும் போது ஒரு சிறு கடையில் இருந்து ரூபா 10,000 வீதம் ஒரே தடவையில் செலுத்தும் பணமும், 142 கடை சதுரங்களில் ஒரு சதுரத்திற்கு ரூபா 5,000 வீதம் ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவிடப்படும் அடிப்படையில் அச் சிறு கடைகளும், கடை சதுரங்களும் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக 2014 அக்டோபர் 02 திகதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது சந்தையிலுள்ள சிறு கடைகளில் இருந்தது அறவிடப்பட வேண்டிய

ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 2,285,000 வும் மற்றும் சந்தையிலுள்ள கடை சதுரங்களில் அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் செலுத்தும் பணம் ரூபா 525,000 வும் ஆக மொத்தம் ரூபா 2,810,000 தொகை ஒன்று அறவிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டிருந்த 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தும் சட்டத்தின் தேவையின் பிரகாரம் சபை அங்கத்தவர்கள் 06 பேரினால் 2013 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்க் வெளிப்பத்தல் கூற்று கணக்காய்வுத் திகதியாகிய 2014 அக்டோபர் 05 திகதி வரை கொடுத்திருக்கவில்லை.

3.2 நெழுவ பொதுச் சந்தையில் கடைகள் வாடகைக்கு கொடுத்தல்

---------------------------------------------------------------------------------------------------

நெழுவ புது இரண்டு மாடி பொதுச் சந்தையின் தரை மாடியில் 19 கடைகள், முதல் மாடியில் 24 கடைகள் உட்பட 43 கடைகள் 2011 ஜனவரி 01 திகதி உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக 2014 அக்டோபர் 04 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப்பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உடன்படிக்கையின் நிபந்தனை 06 இன் பிரகாரம் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரங்கள் தவிர வேறு வியாபாரமொன்றினை கடையில் நடத்துவதற்கு அங்கீகாரம் காணப்படவில்லை. எனினும் 08 கடைகள் வேறு வியாபாரங்களுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) உடன்படிக்கையில் நிபந்தனை 07 இன் பிரகாரம் வாடகைக்கு பெற்றவர் அக் கடையை அல்லது அதன் ஒரு பகுதியை அனுபவிக்கும் உரிமையை வேறு ஒருவருக்கு விற்பனை செய்தல் அல்லது சாட்டுதல் செய்தல் அல்லது இடை வாடகைக்கு விடுதல் அல்லது பிரதேச சபையின் அங்கீகாரம் இன்றி மூன்றாம் தரப்பினருடன் இணக்கம் ஒன்றிற்கு வரமுடியாது என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 05 கடைகள் இடை கீழ் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) உடன்படிக்கையின் நிபந்தனை 13 இன் பிரகாரம் மூன்று மாதங்கள் அல்லது அதனை விட கூடுதலான காலம் வாடகை செலுத்துவதில் தாமதம் செய்யும் போது நிலுவை வாடகையை அறவீடு செய்து விட்டு வாடகைக்கு எடுத்த தரப்பினரை கடையில் இருந்து அகற்றிவிடுவதற்கு வாடகைக்கு எடுத்த தரப்பின்ர் இணங்கியுள்ளார்கள் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்வாறு 03 மாதங்களுக்கு மிகையான காலம் கடை வாடகை செலுத்தாமல் காணப்பட்ட 05 கடைகளின் வாடகைக்கு பெற்றவர்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) உடன்படிக்கையின் நிபந்தனை 17 இன் பிரகாரம் தலைவரின் எழுத்துமூல அங்கீகாரம் இன்றி வாடகைக்கு பெற்றுள்ள ஆதனத்தில் மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளாமல்

இருப்பதற்கு வாடகைக்கு பெற்றோர் இணங்கி இருந்த போதும் தரை மாடியில் இலக்கங்கள் 02, 05 மற்றும் 06 மற்றும் முதல் மாடியில் இலக்கம் 21 மற்றும் 22 கடைகளில் பலகைகளால் மறைத்து மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(v) உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 20 இன் பிரகாரம் கடைகளுக்கு உட்செல்வதற்காக உள்ள நுழைபாதையில் மற்றும் கடைகளின் வெளிப்பகுதியில வியாபாரப் பொருட்கள் வைத்தல் கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தாலம் தரை மாடியில் 14 இலக்க கடை மற்றும் முதல் மாடியில் நுழைபாதையில் மற்றும் கடைகளில் முற்பகுதியில் காட்சிக்காக பொருட்கள் அடுக்கப்பட்டிருந்தன.

(vi) உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 21 இன் பிரகாரம் கடைகளை பண்டக் களஞ்சியங்களாகப் பயன்படுத்தக் கூடாது எனினும் தரை மாடியில் 03 இலக்க கடையில் மின் உபகரணங்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

(vii) பொது மக்களின் நலனுக்காக வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காகவே சபையினால் கடைகள் வாடகைக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. எனினும் தரை மாடியில் கடை இலக்கம் 01,03,09 மற்றும் முதல் மாடியில் இலக்கம் 01,02,03 ஆகிய கடைகள் மூடப்பட்டுக் காணப்பட்டன.

3.3 நிதிக் கட்டுப்பாடுகளில் பலவீனம்

------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான வங்கி நடைமுறைக் கணக்கில் 03 வருடங்களுக்கு முன்னர் இருந்து காசேட்டின் மீதி மற்றும் வங்கி கூற்றின் மீதி இடையே ரூபா 19,218 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. எனினும் அவ் வித்தியாசத்தை இனங்கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.4 கருத்து முரண்பாட்டு தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------------

2 நலன்புரி சங்கங்களினால் மற்றும் விவசாய சங்கம் ஒன்றினால் பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குமாறு கேட்டிருந்த விண்ணப்பத்தின் பிரகாரம் கூறுவிலை கோரப்பட்டு பிளாஸ்டிக் கதிரைகள் வழங்குவதற்கான 2013 மே 28 திகதி சபை தீர்மானத்தின் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் பிரகாரம் 2013 ஜூன் 17 திகதிய உறுதிச் சான்று இலக்கம் 350 இன் மூலம் ரூபா 200,000 செலுத்தி 290 கைதாங்கியுடனான கதிரைகள் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்வனவு செய்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கதிரைகள் கொள்வனவு செய்வதற்கு கேள்வி சபை தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை, அத்துடன் மூன்று நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் பெறப்பட்டு, கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கதிரைகள் கொள்வனவு செய்திருந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலைப் பட்டியல் திகதி மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) கொள்வனவு செய்திருந்த கதிரைகளை சபையின் தொக்கு புத்தகத்தில் அல்லது பொருட் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை. அத்துடன் கதிரைகளின் வினியோகம் பற்றிய விபரம் அடங்கிய பதிவேடு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒரு நலன்புரி சங்கத்தினால் பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கியதற்காக நன்றி தெரிவித்து தலைவருக்கு 2013 ஜூன் 27 திகதி சமர்ப்பித்திருந்த கடிதத்தினை

உறுதிச் சான்றுடன் இணைக்கப்பட்டு காணப்பட்டது. அவ்வாறு பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கியிருக்கவில்லை என சங்கத்தின் தலைவர் மற்றும் உப தலைவரினால் 2014 அக்டோபர் 01 திகதி கணக்காய்விற்கு எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) 100 கதிரைகள் பெற்றுக் கொடுக்குமாறு விண்ணப்பித்திருந்த போதும், 2014 அக்டோபர் 01 திகதி வரை கதிரைக் வழங்கியிருக்கவில்லை என அடுத்த நலன்புரி சங்கத்தின் செயலாளரினால் கணக்காய்விற்கு எழுத்துமூல கூற்றொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2013 மே 15 திகதி விவசாயச் சங்கத்தின் செயலாளரினால் கதிரைகள் பெற்றுக் கொடுக்குமாறு சபைக்கு விண்ணப்பித்திருந்ததென குறிப்பிடப்பட்டிருந்த போதும், சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் நான் கதிரைகள் வழங்குமாறு பிரதேச சபையை வேண்டிக்கொள்ளவில்லை எனவும், சங்கம் ஒரு விவசாய அமைப்பு ஒன்று எனவும் அதன் மூலம் விவசாய விடயங்களில் முன்னேற்றத்திற்காக நடவடிக்கைகள் மற்றுமே மேற்கொள்ளப்படுகின்றது எனவும் விழாக்களுக்காக கதிரைகள், கூடாரங்கள் வழங்கள் சங்கத்தின் செயற்பாடு ஒன்றல்ல எனவும் அதன் பிரகாரம் சங்கத்திற்கு கதிரைகள் பெறவேண்டிய தேவையில்லை எனவும், விவசாய சங்கத்தின் செயலாளரினால் 2014 அக்டோபர் 01 திகதி எழுத்து மூலமாக அறிவித்திருந்தார். இது தவிர 2013 அல்லது 2014 ஆண்டின் போது பிரதேச சபையினால் சங்கத்திற்கு கதிரைகள் வழங்கியிருக்கவில்லை எனவும் அங்கு குறிப்பிடப்பட்டிருந்தது.

3.5 செயற்படாத சொத்துக்கள்

--------------------------------------------

ரூபா 250,000 பெறுமதியான கைடிரக்டர் வண்டி ஒன்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2008 ஜனவரி 11 திகதி சபைக்கு நன்கொடையாக வழங்கியிருந்தது. 2014 அக்டோபர் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது இந்த வாகனம் ஓட்ட நிலையில் அன்றி சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது எனவும் ஓட்ட நிலையில் காணப்படாமையால் டயர்கள் பயன்படுத்த முடியாத நிலைமையை அடைந்துள்ளதென அவதானிக்கப்பட்டது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்